

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமியிடம் காசிமேடு மீன் பிடி மீனவர்கள் தங்கள் நீண்ட நாள் கோரிக்கையான காசிமேடு மீன் பிடி துறைமுகத்தை நவீனமயமாக்கி தர வேண்டும் கோரிக்கை வைத்தனர். தொகுதி மக்களின் கோரிக்கையும் மீன்பிடி மீனவர்களின் கோரிக்கையும் ஏற்று காசிமேடு மீன்பிடி துறைமுகம் நவீனமயமாக்குதல் குறித்து நாடாளுமன்றத்தில் கலாநிதி வீராசாமி தொடர்ந்து குரல் எழுப்பினார், மேலும் இது சம்பந்தமாக ஒன்றிய அமைச்சருக்கும், சென்னை மாவட்ட ஆட்சியருக்கும் காசிமேடு மீன்பிடி துறைமுகம் குறித்து கோரிக்கை கடிதம் எழுதினார். இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமியின் தொடர் கோரிக்கையை ஏற்று காசிமேடு மீன்பிடி துறைமுகத்தை நவீன மயமாக்க ரூபாய் 97 கோடியே 85லட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்ய ஒன்றிய அமைச்சகம் ஒப்புதல் அளித்து அப்பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது.



செங்கல்பட்டு மாவட்டம் கேளம்பாக்கம், வி.ஐ.டி.பல்கலைக்கழகத்தில் நேற்று (21.08.2024) உணவே மருந்து விழிப்புணர்வு நிகழ்ச்சியினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் துவக்கி வைத்து, கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டனர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.அருண்ராஜ், காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த ரமேஷ். திருப்போரூர் ஊராட்சி ஒன்றிய குழு பெருந்தலைவர் எஸ்.ஆர்.எல்.இதயவர்மன். காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் திருமதி.உதயா கருணாகரன், மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் திருமதி.அனுராதா, வி.ஐ.டி.பல்கலை கழக வேந்தர் முனைவர்.கோ.விஸ்வநாதன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கோவை மாநகர் மாவட்டத்தில்

# வட்டங்கள் - பகுதிக் கழகங்கள் தோறும் பொது உறுப்பினர் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிவிப்பு

கோவை, ஆக. 22 -

கோவை மாநகர் மாவட்டத்தில் வட்டங்கள் தோறும் பொது உறுப்பினர் கூட்டங்கள் நடைபெறுகிறதென்று மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர், தளபதி அவர்கள் தலைமையில் கடந்த 16.08.2024 அன்று நடைப்பெற்ற மாவட்டச் செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கு ஏற்ப,

முதலமைச்சர், கழக தலைவர் தளபதி அவர்களால் அறிவிக்கப்பட்ட, 2026 ஆம் ஆண்டிற்கான சட்டசபை தேர்தலின் திமுக ஒருங்கிணைப்பு குழுவினர் அமைச்சர் கே.என்.நேரு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் தங்கம் தென்னரசு, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோரின் வழிகாட்டுதலில், தமிழ்நாடு வீட்டுவசதித்துறை, மற்றும் மதுவிலக்கு, ஆயத்தீர்வைத்துறை மற்றும் மாவட்ட பொறுப்பு அமைச்சர் சு.முத்துசாமி ஆகியோரது வழிகாட்டுதலில், 19.08.2024 அன்று திமுக செயற்குழு கூட்டம், கோவை, மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இது குறித்து மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

இக்கூட்டத்தில் வட்டங்கள் தோறும் வட்டக் கழக கூட்டங்கள், 16 பகுதி கழக பொது உறுப்பினர் கூட்டம் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

வட்ட கழகங்களிலும், பகுதி கழகங்களிலும் கூட்டங்கள் நடைபெறும் பொழுது அந்தந்த வட்டங்களுக்கு, பகுதிகளுக்கு உட்பட்ட இடங்களில் கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.

பகுதி கழக செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், கூட்டம் நடைபெறும் இடம், நாள், தேதி, நேரம் போன்றவற்றை முறையாக அச்சிட்டு சுற்றறிக்கை மூலம் அப்பகுதி தலைமை கழக நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அணிகளின் அனைத்து நிர்வாகிகள்,பகுதி நிர்வாகிகள், வார்டு நிர்வாகிகள், BLA2, பூத் கமிட்டி உறுப்பினர்கள், கழக செயல்வீரர்கள் மற்றும் கழக பொது உறுப்பினர்கள் என அனைவருக்கும் தெரிவிக்க வேண்டும்.

ஒவ்வொரு வட்டங்களிலும், கழக உறுப்பினர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப அனைத்து கழக நிர்வாகிகள், உறுப்பினர்களுக்கு சுற்றறிக்கை அளித்து தகவல் தெரிவிக்கவும்.

மேற்காணும் நடைமுறைகளை பின்பற்றி வட்டக் கழக செயலாளர்கள், பகுதி கழக செயலாளர்கள் பொது உறுப்பினர் கூட்டம் நடத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

சிங்காநல்லூர் தொகுதி,

சிங்காநல்லூர் பகுதி1 க்கு உட்பட்ட வார்டுகளில் நடைபெறும் கூட்டங்கள் விபரம்:

வார்டு எண் 55 24.08.2024 மாலை 5.00 மணி ஏ.ஆர்.எஸ். மஹால்.

வார்டு எண் 56 ★ ★26.08.2024 மாலை 6.00 மணி



செங்கோடம்மன் கோவில் மண்டபம்.

வார்டு எண்57 23.08.2024 மாலை 5.00 மணி எஸ்.வி.எஸ் மஹால்.

வார்டு எண்58 25.08.2024 மாலை 5.00 மணி விக்னேஷ் மஹால்.

பீளமேடு பகுதி3 க்கு உட்பட்ட வார்டுகளில் நடைபெறும் கூட்டங்கள் விபரம்

வார்டு எண் 50 மாலை 6.00 மணி என்.ஜி.ஆர் வீதி, உடையாம் பாளையம்.

வார்டு எண் 51 3.9.2024 மாலை 6.00 மணி சமூக கூடம், சௌரிபாளையம்.

வடக்கு தொகுதி

வடவள்ளி பகுதிக்கு உட்பட்ட வார்டுகளில் நடைபெறும் கூட்டங்கள் விபரம்

வார்டு எண் 36 வார்டு அலுவலகம்

வார்டு எண் 37 24.08.2024 மாலை 5.00 மணி மருதம் ஸ்போர்ட்ஸ் கிளப்.

வார்டு எண் 38 25.08.2024 காலை 10.00 மணி வார்டு அலுவலகம்.

வார்டு எண் 39 25.08.2024 மாலை 5.00 மணி வார்டு அலுவலகம்.

வார்டு எண் 40 25.08.2024 மாலை 7.00 மணி காஸ்மோ வில்லேஜ், பொங்காளியூர்.

பாப்பநாயக்கன் புதூர் பகுதிக்கு உட்பட்ட வார்டுகளில் நடைபெறும் கூட்டங்கள் விபரம்:

வார்டு எண் 41 22.08.2024 மாலை 7.00 மணி திமுக அலுவலகம், பிஎன் புதூர்.

வார்டு எண் 74 23.08.2024 மாலை 7.30 மணி சமுதாயக்கூடம், பூசாரி பாளையம்

வார்டு எண் 75 23.08.2024 மாலை 6.00 மணி.

மற்ற பகுதிகளின் சுற்றறிக்கை பட்டியல் தயார் செய்து தெரிவிக்குமாறு பகுதி கழக செயலாளர்கள் மற்றும் வட்டக் கழக செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

கோவை மாநகர் மாவட்டத்தின் பிற வட்டங்கள், பகுதிகளில் நடைபெறவிருக்கும் கூட்ட விபரங்கள் தொடர்ந்து அறிவிக்கப்படும்.

அந்தந்த தொகுதி, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள்,கழக செயல்வீரர்கள் மற்றும் கழக பொது உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### துபாயில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 6-ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

## அமீரக தி.மு.க. அமைப்பாளர் எஸ்.எஸ்.மீரான் தலைமையில் நடைபெற்றது!

துபாய், ஆக.22-

துபாயில் கடந்த 7-8-2024 அன்று புதன்கிழமை 'முத்தமிழ் அறிஞர்' 'கலைஞர்' அவர்களின் ஆறாவது நினைவேந்தல் நிகழ்ச்சி தெய்ரா துபாயில் அமைந்திருக்கும் 'லேண்ட் மார்க் கிராண்ட்' நான்கு நட்சத்திர விடுதியில், அமீரகத் திமுக அமைப்பாளரும், வெளி நாடுவாழ் தமிழர் நலவாரிய குழு உறுப்பினருமான எஸ். எஸ்.மீரான் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அமெரிக்காவில் மென்பொருள் நிறுவனம் ஒன்றை நடத்தி வரும் தட்சிணாமூர்த்தி, இந் நிகழ்ச்சி நடைபெறுவதை சமூக வலைத்தளம் வழியாக அறிந்து கொண்டு இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தார். கலைஞரின் அறிவார்ந்த தமிழையும் அதைக் கேட்டு, தான் வளர்ந்ததையும் தன் பேச்சில் நினைவு கூர்ந்தார்.

அதேபோல கணினி மென்பொருள் இஞ்சினியராக பணிபுரியும் டயானா ஆன்ட்ரூஸ் பேசுகையில், சிறுபான்மையினருக்காக கலைஞர் வகுத்த திட்டங்கள் எந்த அளவிற்கு ஒரு சிறிய கிராமத்தில் இருந்து தன்னை துபாய் போன்ற பெரு நகரத்திற்கு அழைத்து வந்திருக்கிறது என்பதை நா தளுதளுக்க விவரித்து அவையை மிகவும் உணர்ச்சி பூர்வமாக்கினார்.

தொடர்ந்து பேசிய பாலாஜி, கலைஞரின் போராட்ட குணத்தையும், அவரது வயதான காலத்திலும் கூட சிறைச்சாலைக்கு செல்லும்போது அஞ்சாமல் அதை எதிர்கொண்ட மன உறுதியையும் பாராட்டினார்.

கலைஞரின் சிறப்புகளைப் பற்றிப் பேசிய கவிஞர் மரியம் கபீர், கலைஞர் வகுத்த திட்டங்கள் இன்றைக்குப் பல மாநிலங்களிலும் முன்னுதாரணத் திட்டமாக உபயோகத்துக்கு வந்திருப்பதைச் சுட்டிக் காட்டினார்.

வேலூர் மாநகராட்சியின் கவுன்சிலர் பட்டேல் பேசுகையில் துபாய் போன்ற பெரு நகரத்தில் கடல் கடந்து வந்தும் கலைஞருக்காக வேலை நாள் ஒன்றில் பெருந்திரளாக அனைவரையும் காணமுடிந்ததில் மகிழ்ச்சி அடைவதாக குறிப்பிட்டார்.

இளம் வயதிலேயே கலைஞரின் கையால் பரிசு வாங்க கிடைத்தத் தருணங்களை நினைவு கூர்ந்து, கல்விக்குக் கலைஞர் அளித்த முக்கியத்துவத்தையும், அதன் மூலம் தமிழகம் என்று அடைந்திருக்கும் வளர்ச்சியைப் பாராட்டினார் 'ஆர்ஜே' அஞ்சனா அமீரக எழுத்தாளர் வாசகர் குழுமத்தின் நிறுவனரான ஆசிப் மீரான் பேசுகையில், கலைஞரின் நாவன்மையையும், புத்திக் கூர்மையையும், சட்டசபையில் அவர் எதிர்கொண்ட சவால்களையும், அதற்கு அவர் அளித்த பதில்களையும், தமிழுக்கு அவர் அளித்த பெரும் கொடைகளையும் சுட்டிக்காட்டி, “இத்தனை மதிநுட்பம் உள்ள ஒரு தலைவர் தமிழ்நாட்டிற்குக் கிடைத்தது தமிழர்களுக்கெல்லாம் மிகப்பெரும் பெருமை” என்று குறிப்பிட்டார்.

இந்த விழாவில் கேரளத்தைச் சேர்ந்த முஸ்லிம் லீக் அமைப்பாளரும், கேஎம்சிசி அமைப்பின் பிரதிநிதியுமான கலந்து கொண்டு மலையாளத்தில் கலைஞரை வாழ்த்தி நினைவு கூர்ந்தார்.

இறுதியாக, கலைஞரின் நினைவு நாளில் அவரை, அவரது நினைவுகளை, அவரது புகழை, அவரது சாதனைகளை நினைவு கூர்வதற்காக வேலை நாளென்ற போதும் பெரும் திரளாக வந்திருந்தவர்களுக்கு நன்றி கூறி பேசிய அமீரக திமுகவின் அமைப்பாளரான எஸ். எஸ். மீரான், கலைஞர் என்ற ஆளுமையின் வியக்கத் தகுந்த பரிமாணங்களை சுட்டிக்காட்டி விரிவாகப் பேசினார். மேலும் கலைஞர் அவர்களின் பல்வேறு சாதனைகளையும், அவர் கொண்டு வந்த திட்டங்களால் தமிழகத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும்,அதன் மூலம் பலடனந்தவர்களின் எண்ணிகளையும் நினைவு கூர்ந்தார்.

முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களின் உருவப்படத்திற்கு மலர் தூவி நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

நிகழ்ச்சியில் பிளாக்துளிப் செந்தில், அபுதாபி ஜாகிர், ரெங்கராஜன், இன்ஜினியர் பாலா,இர்ஷாத், செந்தில் பிரபு, பி.ஆர்.ஓ. கபீர், பொதக்குடி தாரிக், சேக் தாவுது, பன்னீர்செல்வம், உதயநிதி பாலா, சுலைமான் மணிவேல், இஸ்மாயில், பாலா, பருத்தி இக்பால், மச்சேந்திரநாதன், வீ.பாண்டியன், அமீன், பாரூக், ரமேஷ், கமல், ஜின்னா, சாகுல் ஹமீது, அப்துல் காதர் உட்பட அமீரக தி.மு.க.வை சார்ந்த பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.



துபாயில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6–ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி அமீரக தி.மு.க. அமைப்பாளர் எஸ்.எஸ். மீரான் தலைமையில் நடைபெற்றது. இதில் அமீரகத்தைச் சேர்ந்த கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மகளிரணி முன்னாள் அமைப்பாளர்

# ராசாமணி சகாதேவன் இல்ல மணவிழா! டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் வாழ்த்துரை!

## படப்பை ஆ.மனோகரன் - ஏ.வந்தேமாதரம் - பட்டூர் எஸ்.ஜபருல்லா வரவேற்புரை!

காஞ்சிபுரம், ஆக.22 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக முன்னோடி கள் நினைவில் வாழும் பரணிபுத்தூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் மு.சகாதேவன் - மாவட்ட மகளிரணி முன்னாள் துணை அமைப்பாளர் ராசாமணி சகாதேவன் ஆகியோரின் பேரனும், ச.ஜெய்சங்கர் - ஜெ. ஜெயஶ்ரீ ஆகியோரின் புதல்வருமான ஜெ.கார்த்திக்கும், திருவண்ணாமலை மாவட்டம், முத்தரசம் பூண்டி நினைவில் வாழும் இரா. கண்ணன் - நலமுடன் கு.பொன்னம்மாள் ஆகியோரின் பேத்தியும்,



போரூர் க.முருகன், மு.பரிமளா ஆகியோரின் புதல்வியுமான மு.ஷாலினிக்கும் மணவிழா நாளை 23.08.2024 வெள்ளிக்கிழமை காலை 6.30 மணியளவில் கோவூர் ரமணி திருமண மஹாலில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பு இன்று 22.08.2024 - வியாழன் மாலை 6 மணியளவில் நடைபெறுகிறது.

இம் மணவிழா வரவேற்பில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையேற்று மணமக்களை வாழ்த்துகிறார்.

ஒன்றியச் செயலாளர்கள் படப்பை ஆ.மனோகரன், ஏ.வந்தேமாதரம், நகரச் செயலாளர் பட்டூர் எஸ்.ஜபருல்லா ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம் மணவிழா வரவேற்பில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்.

மேலும் ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., சரஸ்வதி மனோகரன், உமாமகேஸ்வரி, வந்தே மாதரம், கோ.சத்தியமூர்த்தி, க.எத்திராஜ், து.சுந்தர், பொன். ஜீவா, கே.வசீகரன், பூங்கொடி அரசு, எஸ்.ராஜேந்திரன், எஸ்.சந்தானம், எஸ். கே.துளசிங்கம், பா.ராஜேந்திரன், தி.க.பாஸ்கரன், டி.எஸ்.எம்.ஜெயகரன், டி. ஆர்.சாரதி, ப.குமரவேல், தா.அன்பழகன், தமிழரசி சுரேஷ், சையத் சுலைமான் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

ஜெ.யுவராஜ், ஜெ.சரத்குமார், 'முரசொலி' முகவர் ஜெய்கணேஷ் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

### சென்னை குடிநீர் வாரிய அலுவலகத்தில்

# மேலாண்மை மைய செயல்பாடுகள் குறித்து கருத்தரங்கம்!

## நகராட்சி நிர்வாகச் செயலாளர் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஆக 22-

சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள சென்னை குடிநீர் வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் அரசு முதன்மைச் செயலாளர் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, முனைவர் தா.கார்த்திகேயன், தலைமை பொறியாளர்கள், மேற்பார்வை பொறியாளர்கள் மற்றும் பகுதிப் பொறியாளர்களுக்கு புவியிடம் சார்ந்த தகவல் அமைப்பு (GIS - Geographic Information System) மேலாண்மை மையத்தின் செயல்பாடுகள் குறித்த பயிலரங்கத்தினை நேற்று (21.08.2024) தொடங்கி வைத்தார்.

இப்பயிலரங்கினை தொடங்கி வைத்து அரசு செயலர் தெரிவித்தாவது:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு முன்னிலையில் 12.08.2024 அன்று சென்னை குடிநீர் தலைமை அலுவலகத்தில் ரூ.17 கோடியே 80 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புவியிடம் சார்ந்த தகவல் அமைப்பு மேலாண்மை மையத்தினை காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.

குடிநீர் வாரியத்தின் கட்டமைப்புகளை புவியிடம் சார்ந்த தகவல்களோடு சேகரித்து அதனை நிருவாகிப்பதற்கு ஏதுவாக இம்மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்மையத்தில் உள்ள காணொளி திரை (Video Wall) முலம் வாரியத்தின் கட்டம்மைப்பின் விவரங்களை வரைபடத்துடன் முழுமையாக பார்வையிடுவதற்கு ஏதுவாகவும், பராமரிப்பு பணிகளின் விவரங்கள் மற்றும் புதிய குடிநீர்/ கழிவுநீர் கட்டமைப்புகளில் மேற்கொள்ளப்படும் பணிகளின் விவரங்கள் உடனுக்குடன் update செய்யப்படும்.

இந்த விவரங்களை எந்த இடத்தில் இருந்தும் செல்போன்கள் மூலம் பார்த்திட முடியும். இதில் சேகரிக்கப்படும் தகவல்கள் அனைத்தும் சென்னை பெருங்குடியில் உள்ள தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் பாதுகாப்பாக பராமரிக்கப்படும். மேலும் இதன் பிரதி (copy) திருச்சியில் உள்ள தரவு மையத்தில் பாதுகாப்பாக வைக்கப்படும். இம்மையத்தில் திரவுகள் அனைத்தும் பதிவேற்றம் செய்யப்படுவதால், குடிநீர் வாரிய இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளில் செயல்திறனை மேம்படுத்தவும் தக்க முடிவுகளை உரிய நேரத்தில் எடுக்கவும் முடியும். இதன் மூலம் பொது மக்களுக்கு துரிதமான சேவைகள் வழங்கிட முடியும். இம்மையத்தின் பயன்பாட்டிற்காக 5 நில அளவை கருவிகள் (DGPS - Differential Global Positioning System) மற்றும் 22 காந்தப்புல கண்டுபிடிப்பான் கருவிகள் (Magnetic Locators) வழங்கப்பட்டுள்ளது. இந்திய வரைப்பட அமைப்பு துறையிலிருந்து (Survey of India) பெறப்பட்ட தரைமட்ட அளவுகளை ஆதாரமாக கொண்டு செயற்கை கோள் அமைப்பின் மூலம் நிலை அளவை முறையில் 75 தரைக்கட்டுப்பாடு புள்ளிகள் (Ground Control Points) சென்டிமீட்டர் அளவிலான துல்லியத்துடன் நிறுவப்பட்டுள்ளது. குடிநீர் கட்டமைப்பில், நீர் ஆதாரங்களில் இருந்து வீடு வரையில் உள்ள கட்டமைப்பு மற்றும் வீட்டு வளாகத்திலிருந்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் வரையில் உள்ள கழிவுநீர் கட்டமைப்புகள் போன்றவைகளும், 1 லட்சத்தி 50 ஆயிரம் இயந்திர நுழைவாயில்களும், 7268 கி.மீ. தூரம் அளவிலான குடிநீர் குழாய்களும், 4659 கி.மீ. தூரம் அளவிலான கழிவுநீர் குழாய்களும், 356 கழிவுநீர் உந்து நிலையங்கள், 129 குடிநீர் பகிர்மான நிலையங்களின்விவரங்கள் துல்லியமாக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.இத்தரவுகள் அனைத்தும் 159 அடுக்குகளை கொண்ட ஒரு வலுவான புவித்தரவு தளவுமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

அனைத்து மண்டலங்களிலும் மேற்கொள்ளப்படும் பராமரிப்பு பணிகள் தொடர்பான அனைத்து விவரங்களையும் இதற்காக உருவாக்கப்பட்டுள்ள செயலியில் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் கண்டிப்பாக பதிவேற்றம் செய்ய வேண்டும். இது தொடர்பான அனைத்து விவரங்களும் அலுவலர்களுக்கு தெரிவிப்பதற்காக இப்பயிலரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைத்து நிலை அலுவலர்களுக்கும் தொடர்ந்து பயிற்சிகள் அளிக்கப்படும். மேலும் குடிநீர் வாரியத்தின் அன்றாட செயல்பாடுகளை நவீன தொழில்நுட்பத்துடன் இணைத்து மேற்கொள்வது மூலம் பொது மக்களுக்கு தரமான சேவையினை வழங்கிட முடியும் என்பதை கருத்தில் கொண்டு அலுவலர்கள் அனைவரும் பணியாற்றிட வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர்.டி.ஜி.வினய், இ.ஆ.ப, செயல் இயக்குநர் செ.சரவணன், பொறியியல் இயக்குநர் எம்.ஜெய்கர் ஜேசுதாஸ், தலைமை பொறியாளர்கள் இரா.சிவமுருகன், ஆர்.கந்தசாமி, இரா.கண்ணன், மேற்பார்வை பொறியாளர்கள், பகுதிப் பொறியாளர்கள் உட்பட பல்வேறு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.